நல்வரவாகுக!

**ஒன்றிணைவு எமது சிறப்புநிபுணத்துவத்துறை**

"FABIA குடியேற்ற மக்களின் ஆலோசனைக்கும் ஒன்றிணைதலுக்குமான நிபுணத்துவப்பணிமனை." இது, குடியேற்ற மக்களின் ஒன்றிணைதலுக்காகச் செயற்படுகின்ற, அரசியல், சமய சார்பற்ற ஒரு நிறுவனமாகும். இந்நாட்டு மக்களும், குடியேற்ற மக்களும் இணைந்து வாழ்தலை ஊக்குவிப்பதை மையமாகக் கொண்டது எமது வேலை.

வதிவிட உரிமைப்பத்திரம் L, B, C, F (10+) வழங்கப்பட்ட குடியேற்றவாசிகளும் சுவிஸ் மக்களும் நன்மை பெறுவதை இலக்காகக் கொண்டது எமது நிறுவனம். அது தவிர, தனியார், பொதுநலசேவைகளைச் சேர்ந்த துறைசார் நிபுணர்களும் எமது வாய்ப்புக்களைப் பயன்படுத்துகின்றனர். தனிப்பட்ட மனிதர்கள், குழுக்கள், பொதுநலசேவை அல்லது தனியார் கழகங்களும் ஸ்தாபனங்களும் இங்கு நன்மை பெறலாம்.

**எமது வேலைப்பிரிவுகளாவன:**

### தகவலும் ஆலோசனையும்

FABIA குடியேற்றம் சம்பந்தமான பிரிவில் ஒன்றிணைவு சம்பந்தமான கேள்விகளுக்கான ஒரு தகவல் ஆலோசனை மையத்தை நடாத்துகின்றது. அது லுட்சேர்ண், மாநிலத்தை வசிப்பிடமாகக் கொண்ட மனிதர்களுக்கும் குடியேற்ற மக்களுடன் தொடர்புடைய துறைசார்நிபுணர்களுக்கும் கீழ்க்காணும் விடயங்கள் சம்பந்தமாக தகவலையும் ஆலோசனையையும் வழங்குகின்றது:

- சமூக, குழு, தொழில் ரீதியான ஒன்றிணைவு
- குடியேற்றம் சம்பந்தமான ஒன்றிணைவுக்கலாச்சாரமும் மாற்றுக்கலாச்சாரமும் சம்பந்தமான வினாக்கள்
- மொழி வகுப்புக்களும் ஒன்றிணைதல் வாய்ப்புக்களும்
- சமூகநலத்திட்டங்கள், ஆரோக்கிய நடைமுறைகள் பற்றிய கேள்விகள்
- கல்விப்பிரிவு சம்பந்தமான கேள்விகள்
- துறைசார்நிபுணர்களுக்கான நடுவர் (உதாரணமாக வைத்தியர்கள், பயிற்சியாளர்கள், வழக்கறிஞர்கள்)
- சட்ட சம்பந்தமான தகவல்கள் (வதிவிட உரிமைப்பத்திரங்கள், சமூக காப்புறுதிகள், குடும்ப உரிமைகள் போன்றன.)

FABIA குடியேற்றம், ஒன்றிணைதல் போன்ற விடயங்கள் சம்பந்தமான தகவல்களைக் கொண்ட ஒரு விபரண இணையத்தளப்பக்கமான www.integration-zentralschweiz.ch ஐ நடாத்துகின்றது.

### தனிப்பட்ட சமூக உதவி

Buchrain, Ebikon, Horw, Kriens உள்ளூராட்சி நிர்வாகசபைகளினதும், Luzern மாநகரினதும் பணிப்புகளுக்கிணங்க, **தனிப்பட்ட சமூக உதவி** என்பதன் கீழ், FABIA, வெளிநாட்டவர்களுக்கு

ஆலோசனைகளை வழங்குகின்றது. நாம் தனிப்பட்ட பிரச்சினைகளின் போது ஆலோசனைகளை வழங்குவதுடன், நிர்வாக சம்பந்தமான தேவைகளின் போது ஆதரவு வழங்குகின்றோம்.
ஆலோசனைகள் நேரடியான ஒரு கலந்துரையாடல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் வெவ்வேறுபட்ட (அல்பானிய, டொய்ச், ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, போர்த்துக்கேய, சேர்பிய/குரேஷிய/பொஸ்னிய, ஸ்பானிய) மொழிகளில் நடைபெறும். தேவையேற்படின், ஒரு மொழிபெயர்ப்பாளர் வரவழைக்கப்படலாம். நாம் மத்தியசுவிஸ் மொழிபெயர்ப்பாளர்சேவையுடன் இணைந்து வேலை செய்கின்றோம்.

ஆலோசனை வழங்கல் இலவசமானது; நிர்வாக சேவைகளுக்கான ஒரு செலவை நாம் கோருவோம்.

### பாடசாலையும் கல்வியும்

ஆசிரிய, ஆசிரியைகள், சமூக சேவைகள், நிர்வாகப்பணிமனைகள் அதேபோன்று குடியேற்றவாசிகளான பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு, வெளிநாட்டுப் பாடசாலை மாணவ மாணவிகள், இளைஞர்களின் ஒன்றிணைதலும் பாடசாலை நடைமுறைகளும் பற்றிய அனைத்துக் கேள்விகளின் போது, ஆலோசனை வழங்குமாறு FABIA நிறுவனத்திடம், அரசினர் கல்விச்சேவைகள் (Dienstelle Volksschulbildung) பணித்துள்ளது. பாடசாலைகளில் பெற்றோர் கூட்டங்கள், கலாச்சாரங்களுக்கிடையிலான நடுவர்களை ஏற்பாடு செய்தல், எழுத்து மூலமான மொழிபெயர்ப்புக்கள் போன்றவற்றை FABIA ஒழுங்கு செய்கின்றது.

### ஆரம்பத்திலிருந்தே ஊக்குவித்தல்

ஆரம்பத்திலிருந்தே ஊக்குவித்தல் என்னும் விடயத்தின் கீழ் FABIA பெற்றோருக்கும் பாடசாலைக்குச் செல்லத் தொடங்காத பிள்ளைகளுக்கும் வகுப்புக்களை நடாத்துகின்றது. "தாய் /தந்தையரும் பிள்ளைகளுக்குமான டொய்ச்மொழியும் தகவலும்" என்கின்ற வாய்ப்பானது, பாடசாலைக்குச் செல்லத் தொடங்காத பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே டொய்ச்மொழியை அறிந்து கொள்ள ஊக்கமளிப்பதுடன் பெற்றோருக்குப் பிள்ளைவளர்ப்பிலும் ஆதரவு வழங்குகின்றது. "எனக்கு ஒரு கதை கூறுங்கள்" (Schenk mir eine Geschichte) என்கின்ற செயற்றிட்டமானது, குடும்ப இலக்கியம் என்கின்ற விடயத்தின் கீழ், ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகளை ஊக்குவித்தல் என்னும் விடயத்தில், பெற்றோரைப் பலப்படுத்துவதுடன், சிறுபிள்ளைகளது மொழித்தேர்ச்சிக்கும் ஆதரவளிக்கின்றது.

### செயற்றிட்ட ஆலோசனையும் உறுதுணையும்

நாம் நிறுவனங்களுக்கும் கழகங்களுக்கும் இணைந்துவாழ்தல் சம்பந்தமான செயற்றிட்டங்களைத் திட்டமிடுவதற்கு ஆதரவளிக்கின்றோம். உங்களிடம் ஒரு செயற்றிட்டக்கருத்து இருக்குமாயின், அதனைச் செயற்படுத்துவதற்குரிய வாய்ப்பு, ஒழுங்கு செய்தல், கட்டமைப்பு ரீதியான அடிப்படை, நிதியிடல் அதேபோன்று செயற்றிட்டத்தை முன்மொழிவதற்கான வாய்ப்புக்கள் பற்றி நாம் உங்களுக்கு ஆலோசனை வழங்குவோம்.

## பயிற்சிகளும் நிகழ்ச்சிகளும்

FABIA கலாச்சாரங்களுக்கிடையிலான விடயங்கள் பற்றிய பயிற்சிகளையும் மேலதிகததகவல் நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்றது:

- டொய்ச்மொழியும் இணைந்து வாழ்தலுக்குமான பயிற்சிவகுப்புகள்
- அரசினர்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வகுப்புகள்
- சமூக- சுகநல துறைசார் நிபுணர்களுக்கான கல்விப்பட்டறைகள்
- குடும்பத்தில் பல மொழிகள் பேசப்படும் போது …
- இரு வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த தம்பதிகள்
- சுகநலம்
- வாழ்விட உரிமைப்பத்திரமும் ஒன்றிணைதலுக்கான அதன் பக்கவிளைவுகளும்
- சமூக காப்புறுதி
- பாடசாலையிலிருந்து தொழிலுக்கு
- அடிமைப்படுத்தும் பொருட்பாவனைகளும் குடியேற்றமும்
- வீட்டில் வன்முறை
- குடும்பம் சுவிஸிற்கு வருகின்றது

தேவைக்கேற்ப விடயங்கள் FABIA வுடன் கலந்து நிச்சயிக்கப்படும். குடியேற்ற மக்களின் நிறுவனங்களுக்கும், கழகங்களுக்கும் வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமான தகவல் திட்டங்களை FABIA வழங்குவதுடன், குடியேற்ற மக்களின் நிறுவனங்களுக்கும் கழகங்களுக்கும், தகவல் நிகழ்ச்சிகளை அவர்கள் நடாத்துவதற்கும் ஒத்தாசை புரிகின்றது.

## தொடர்பும் இணைந்த வேலையும்

எமது பணியினைப் பிரதியீடு செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட துறைசார் நிபுணர்கள், துறைசார் பணிமனைகள், நிறுவனங்களுடனும் FABIA இணைந்து வேலை செய்கின்றது. தேவைக்கேற்ப தொடர்புகளையும் நாம் ஏற்படுத்திக் கொடுப்போம்.

FABIA பிரதேசத்திலுள்ள குடியேற்ற மக்களின் நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணி ஆதரவளித்து, ஆர்வமுள்ளவர்களைத் தொடர்புபடுத்துவதுடன், ஒழுங்குபடுத்தலுக்கான கேள்விகள் எழுகின்ற போது ஆலோசனையும் வழங்குகின்றது.

30.01.15